## மனித உரிமைக்கும், அரசியலமைப்புக்கும், கூட்டாட்சி முறைக்கும், சிறுபான்மையினருக்கும் எதிரான

# ‘வக்ஃபு’ வாரிய சட்டத் திருத்த மசோதாவை கைவிடுக!

## மக்களவையில் – நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி ஆணித்தரமான பேச்சு!

**புதுடெல்லி, ஆக. 10 –**

**நாடாளுமன்ற மக்களவையில் நேற்று முன்தினம், ‘வக்ஃபு’ வாரிய சட்டத் திருத்த மசோதா மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவரும் – கழக துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி அவர்கள், “இந்தியா எப்படி இருக்க வேண்டும் என்ற கனவுக்கு எதிராக இந்த மசோதா இருக்கிறது” என்றும் “மனித உரிமைக்கும் அரசியமைப்புக்கும் கூட்டாட்சி முறைக்கும் சிறுபான்மையினருக்கும் எதிரான ‘வக்ஃபு’ வாரிய சட்டத் திருத்த மசோதாவை கைவிடவேண்டும்!” என்றும் குறிப்பிட்டார்.**



மக்களவையில் – நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை வருமாறு: -

இது மிகவும் துக்ககரமான நாளாகும், இந்த நாடாளுமன்றத்தில் இது மசோதா வேதனை அளிக்கிறது. இந்த நாடாளுமன்றத்திற்கு நான் புதிதாக வந்தபோது, உறுப்பினர்கள் பலரும் கையில் அரசியல் அமைப்பின் ஒரு நகலைக் கொண்டுவந்தார்கள். அதைக் காப்பாற்ற, பாதுகாக்கப் பட வேண்டும் என்ற எண்ணத்தில், அதுதான் மிகவும் ஆதிக்கம் பெற்றது.

ஆனால், இந்த ஒன்றிய அரசு வெளிப்படையாக அரசியலமைப்புக்கு எதிராக நடக்கிறது என்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இது அரசியல் அமைப்புக்கு மட்டுமல்லாமல், கூட்டாட்சிக்கும் எதிராக இருக்கிறது, மதம் சார்ந்த சிறுபான்மையினருக்கு எதிராக இருக்கிறது, மனிதத் தன்மைக்கு எதிராக இருக்கிறது, இது நீதிக்கு எதிராக இருக்கிறது, ஒவ்வொரு விதத்திலும் இது நீதியை எதிர்க்கிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 25 & 26 இருக்கின்றன, அவை என்ன கூறுகிறது என்றால், ஒவ்வொருவருக்கும் எந்த மதத்தையும் பின்பற்ற உரிமை இருக்கிறது, “மதரீதியான விவகாரங்களை அவர்களே நிர்வாகம் செய்து கொள்ளலாம்” என்ற உரிமை கொடுக்கிறது. ஆனால் வக்பு வாரியத்தில் இஸ்லாமியர் அல்லாதவர் உறுப்பினராக முடியும் என்று இந்தச் சட்டத் திருத்தம் கூறுகிறது. அப்படியென்றால் ஒரு இஸ்லாமியரோ, கிறிஸ்தவரோ இந்து கோவிலில் உள்ள வாரியத்தில் உறுப்பினராக முடியுமா? அதை நீங்கள் அனுமதிப்பீர்களா? சீக்கியர்களுக்கும் இதே சட்டம்தான். மற்றவர்கள் தலையிட நீங்கள் அனுமதிப்பீர்களா?

அப்படி என்றால் ஒரு குறிப்பிட்ட மதத்தில் நம்பிக்கை இல்லாதவருக்கு, அந்த மதம் சார்ந்த முடிவை எடுக்கும் உரிமையை எப்படி வழங்கலாம்?. இது அநீதியாக உங்களுக்குத் தோன்றவில்லையா? நீதிக்கு எதிரானதாக உங்களுக்குத் தோன்றவில்லையா? இது அரசியலமைப்பின் 30வது பிரிவுக்கு நேரடியாக எதிராக இருக்கிறது.

சிறுபான்மையினர் தங்கள் நிறுவனங்களை நிர்வகித்துக்கொள்ள உரிமையை வழங்குகிறது. இப்போது நீங்கள் அந்த உரிமையை, அந்த முடிவெடுக்கும் உரிமையை ஆட்சித் தலைவர்களுக்குக் கொடுக்கிறீர்கள். அந்தச் சொத்து யாருக்குச் சொந்தமானது என்பது குறித்து முடிவெ டுக்கும் உரிமையை யார் கையில் கொடுக்கிறீர்கள்?

பல பழைய மசூதிகள் இப்போது ஆபத்தில் தான் இருக்கின்றன. திடீரென்று ஒரு பொது நல வழக்குப் போடப்பட்டது, அங்கு மக்களும் தொல்லியலாளர்களும் அனுப்பப்பட்டார்கள். முன்பொரு காலத்தில், அது ஒரு கோவிலாக இருந்தது என்று இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் வெறுப்புப் பிரச்சாரம் அதிகமானது, பிரிவினை அதிகமானது, நாட்டு மக்களிடையே பிரிவினை உண்டானது, இதுதான் நடந்து கொண்டிருக்கிறது.

உரிமை செய்ய வக்பு வாரியத்திற்கு உரிமை இருக்கிறது. இந்த மசோதா இஸ்லாமியர்களுக்கு, சிறுபான்மையினருக்கு முற்றிலும் எதிரானது. அவர்கள் இந்த நாடு, மதச்சார்பற்ற ஒரு நாடு என்ற நம்பிக்கையை இழந்து நிற்கிறார்கள். பல மொழிகள், பல மதங்கள், பல இனங்களைச் சேர்ந்தவர்கள் இங்கு ஒன்றாக வாழலாம் என்று நம்பிக்கையை அவர்கள் இழக்கிறார்கள். இந்தியா எப்படி இருக்க வேண்டும் என்ற கனவுக்கு எதிராக இந்த மசோதா இருக்கிறது, நான் இதைக் கடுமையாக எதிர்க்கிறேன்.

**வக்ஃபு வாரிய சட்டத்திருத்த மசோதா மனித உரிமைக்கும், அரசியலமைப்புக்கும், கூட்டாட்சி முறைக்கும் எதிரானது. இஸ்லாமியர் அல்லாதவர்கள் வக்ஃபு வாரியத்தில் உள்ளதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? வக்ஃபு வாரிய மசோதா மத சுதந்திரத்துக்கு எதிரானது. இந்த அரசு அப்பட்டமாக அரசியலமைப்புக்கு எதிராகச் செயல்பட்டு வருகிறது.**

**இந்த மசோதா அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது மட்டுல்ல, கூட்டாட்சி முறைக்கு எதிரானது; சிறுபான்மையினருக்கு எதிரானது; மனிதருக்கே எதிரானது!**

**இந்த நாடு மதச்சார்பின்மை நாடு. வெவ்வேறு நம்பிக்கைகள், வெவ்வேறு மொழிகள்,வெவ்வேறு இனம், மதங்கள் கொண்ட நாடு. நமது முன்னோர்கள் கட்டமைத்த நாட்டை இந்த மசோதா அழித்துவிடும். மதச்சார்பற்ற நாடான இந்தியாவில் இஸ்லாமியர்களுக்கு எதிராக சட்டத்திருத்தம் கொண்டு வருவது தவறு. இச்சட்டத்திருத்த மசோதாவை உடனே கைவிட வேண்டும்.**

இந்த மசோதா என்பது குறிப்பாக, ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினரை இலக்காகக் கொண்டு தாக்குகிறது. இது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பிரிவு 14 என்பதை எதிர்த்து இருக்கிறது, ‘சட்டத்தின் முன்பு அனைவரும் சமம்’ என்பதற்கு எதிராக இருக்கிறது.

அந்தச் சொத்து யாருடையது என்பதை

இவ்வாறு அவர் பேசினார்.

---

## நிதி அமைச்சகம் - அனைத்து பொதுத்துறை நிறுவனங்கள், துணை மற்றும் அது சார்ந்த

# அலுவலகங்களின் கீழ்வரும் காலியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி !

புதுடெல்லி, ஆக.10-

ஒன்றிய அரசின் நிதி அமைச்சகம் மற்றும் அதன் அனைத்து பொதுத்துறை நிறுவனங்கள், துணை மற்றும் அது சார்ந்த அலுவலகங்களின் கீழ் வரும் காலியிடங்களை நிரப்ப ஒன்றிய அரசு போதுமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதா? என நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் மக்களவை உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.



ஒன்றிய அரசின் நிதி அமைச்சகம் மற்றும் அதன் அனைத்து பொதுத்துறை நிறுவனங்கள், துணை மற்றும் அது சார்ந்த அலுவலகங்களின் கீழ் வரும் காலியிடங்களை நிரப்ப ஒன்றிய அரசு போதுமான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறதா?

அப்படியானால், அதன் விவரங்கள்.

1.7.2024 அன்று நிதியமைச்சகத்தின் கீழ் உள்ள அனைத்து உதவி பெறும் மற்றும் கீழ்நிலை அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்களைப் பொறுத்த வரையில் உள்ள பதவி நிலை மற்றும் பணிபுரிவோர் எண்ணிக்கை விபரம்?

எஸ்சி / எஸ்டி / ஓபிசி மற்றும் சிறுபான்மை சமூகங்களுக்காக இட ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்களில் இதுகாறும் நிரப்பப்படாமல் காலியிடங்களை நிரப்புவதற்காக ஏதேனும் சிறப்பு ஆட்சேர்ப்பு இயக்கத்தை ஒன்றிய அரசு தொடங்கியுள்ளதா? அதன் விபரம் குறித்து டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு: -

ஒன்றிய அரசின் நிதியமைச்சகத்தில் காலியிடங்கள் ஏற்படுவதும் நிரப்புவதும் ஒரு தொடர்ச்சியான செயலாகும். காலியிடங்கள் ஏற்படும் போது, அவை UPSC, SSC, வங்கி ஆட்சேர்ப்பு வாரியங்கள் போன்ற ஏஜென்சிகள் மூலமாகவோ அல்லது பிரதிநிதித்துவம் அல்லது பதவி உயர்வு மூலமாகவோ நேரடி ஆட்சேர்ப்பு மூலம் நிரப்பப் படுகின்றன.

01.07.2024 அன்று நிதியமைச்சகம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட/ துணை அலுவல கங்கள், தன்னாட்சி அமைப்புகள், பொதுத்துறை நிறுவனங்களின் 11,03,989 பணியிடங்கள் பணியமர்த்தப்பட்டுள்ளது.

நிதி அமைச்சகம், அதனுடன் இணைக்கப்பட்ட/அடிப்படை அலுவலகங்கள், தன்னாட்சி அமைப்புகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவை காலியாக உள்ள பணியிடங்களை குறிப்பிட்ட காலத்திற்குள் நிரப்பு கின்றன. அக்டோபர் 22, 2022 அன்று பிரதமரால் தொடங்கப்பட்ட ரோஸ்கர் மேளாவில், நிதி அமைச்சகம் உட்பட அரசாங்கத்தில் காலியாக உள்ள பதவிகள் இந்திய ஒன்றிய அரசால் பணி முறையில் நிரப்பப்பட்டுள்ளன. பல்வேறு மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் மத்திய அளவில் 12 ரோஸ்கர் மேளாக்கள் 45 50 நகரங்களில் நடத்தப்பட்டுள்ளன. பல்வேறு மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில். அனைத்து பணியிடங்கள் மற்றும் பதவி உயர்வுகளிலும் அரசின் இடஒதுக்கீடு கொள்கை பின்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் தெரிவித்தார்.

---

## மயிலாடுதுறை மாவட்டம் - கொள்ளிடம் ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ள உபரி நீர்

# நாதல்படுகை கிராமத்தை சூழ்ந்ததை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேரில் ஆய்வு செய்தார்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. - எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ.. பங்கேற்பு!

மயிலாடுதுறை, ஆக. 10-

கர்நாடக நீர் பிடிப்பு பகுதியில் பெய்து வரும் கனமழையால் கர்நாடக அணையில் இருந்து உபரிநீர் பெரும் அளவில் திறந்து விடப்படுகிறது இந்த உபரி நீர் மேட்டூர் அணையை வந்து சேர்ந்தது எடுத்து மேட்டூர் அணையிலிருந்து கர்நாடக அணைகளில் இருந்து வரும் தண்ணீர் முழுவதும் அப்படியே வெளியேற்றப்படுகிறது இந்த உபரி நீர் காவிரி ஆற்றில் இருந்து கொள்ளிடம் ஆற்று வழியாக மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் ஒன்றிய பகுதியில் கடலில் கலக்கிறது. கொள்ளிடம் ஆற்றில் சுமார் 1,64,000 கன அடி நீர் வருவதால் கொள்ளிட கரையோர கிராமத்தில் நீர் உள்புகுந்ததால் அந்த பகுதி மக்கள் பாதிப்படைந்துள்ளனர். இதையடுத்து இதை எடுத்து அந்த பகுதியை கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படி மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி வட்டம் நாதல்படுகை கிராமத்தில் கொள்ளிடம் ஆற்றில் திறந்துவிடப்பட்டுள்ள உபரிநீர் குடியிருப்பு பகுதிகளில் சூழ்ந்துள்ளதை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மேட்டூரில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ள உபரி நீரானது மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் பகுதியில் 1 லட்சத்து 64 ஆயிரம் கன அடி கடந்து செல்கின்ற இடத்தில் நேரடியாக மாவட்ட ஆட்சித்தலைவர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் மற்றும் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் மற்றும் மாவட்டத்தில் இருக்கக்கூடிய அனைத்துத்துறை அதிகாரிகளும் நேரடியாக ஆய்வுகளை மேற்கொண்டுள்ளோம். அந்த அடிப்படையில் இந்த பகுதியில் ஆற்றின் கரையோர பகுதியில் இருக்கின்ற முதலைமேடுதிட்டு, நாதல்படுகை, வெள்ளமணல், ஆச்சாள்புரம், திருமயிலாடி போன்ற பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இங்கு இருக்கின்ற 1400 குடும்பங்களில் உள்ள 5400 பேர் ஏழு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 3.8.2024 காலை முதல் அவர்களுக்கு 3 வேளையும் உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றது. அதேபோல, இந்த பகுதிகளில் பாதிக்கப்பட்ட விவசாய பகுதிகளையும்;, விவசாய பாதிப்புகளையும் வேளாண்மை துறை மூலம் அதற்கான ஆய்வு பணிகள் மேற்கொள்ள உள்ளனர். மேலும், இரண்டு வீடுகள் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதற்கான உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாறு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாறறத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதி, மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கே.மீனா, மாவட்ட வருவாய் அலுவலர் த.மு.மணிமேகலை, சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் உ.அர்ச்சனா,கொள்ளிடம் ஒன்றிய கழக செயலாளர் கொள்ளிடம் மேற்கு செல்ல சேது ரவிக்குமார், கொள்ளிடம் கிழக்கு மலர்விழி திருமாவளவன், பொதுக்குழு உறுப்பினர் கென்னடி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் விஜய பாரதி, கொள்ளிடம் ஒன்றிய குழு தலைவர் ஜெயபிரகாஷ், வட்டாட்சியர் இளங்கோவன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் த.தியாகராஜன் ஆகியோர் உடன் இருந்தனர்.



உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி.பழனி தலைமையில் அரகண்டநல்லூரில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் வீடு கட்டுவதற்கான ஆணையை பொதுமக்களுக்கு வழங்கினார். மாவட்டச் செயலாளர் பொன். கௌதம சிகாமணி, அன்னியூர் சிவா எம்.எல்.ஏ., ம.ஜெயசந்திரன், இரா.ஜனகராஜ், டி.என்.முருகன், தயா.இளந்திரையன், இரா.கற்பகம், மு.தங்கம், டி.செல்வராஜ், ஜி.இரவிச்சந்திரன், அ.சா.ஏ.பிரபு, பி.வி.ஆர்.சு.விசுவநாதன், பிரேமா அல்போன்ஸ், கோபிகிருஷ்ணன், ராயல் அன்பு, சுந்தரமூர்த்தி, பூக்கடை கணேசன், ராஜீவ்காந்தி, அரசு கூடுதல் வழக்கறிஞர் கார்த்திகேயன், தனலட்சுமி உமேஸ்வரன், மணிவண்ணன், குணா, சக்தி சிவம், அந்தோணியம்மாள், வெங்கட், வா.பிரபு, கணேசன், பிரகாஷ், அய்யப்பன், காத்தவராயன், சிவா, சேகர், முருகதாஸ், கோபால், ஒன்றிய செந்தில், அனிதா, மூர்த்தி, சிவா, குப்புசாமி, மணிகண்டன், சத்தியராஜ், ஏழுமலை, கோல்டு ரவி, சக்தி, ஜெகன், கந்தன் பாபு, தங்கராஜ், ராகவன், ஜல்லி பிரகாஷ், துரை, தொ.மு.ச. சரவணன், அமுதா, வெங்கட், சந்திரசேகரன், ஜி. சரவணன், கண்டாச்சிபுரம் தேவி ரவிக்குமார், ஒட்டப்பட்டு அருணா முருகன், பில்ராம்பட்டு கனகாபழனி, தண்டரை சம்பத் குமார், வீரபாண்டி ராமச்சந்திரன், காடகனூர் மஞ்சுளா சந்தரவடிவேல், மேல் வாளை நித்யா ராஜன், அடுக்கம் மூர்த்தி, ஒதியத்தூர் வீரன் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சென்னை மேற்கு மாவட்டம் திருவல்லிக்கேணி பகுதி 119 அ வட்ட கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சி.ஐ.டி.காலனி இல்லத்தில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட திருவுருவப் படத்திற்கு நினைவு அஞ்சலி செலுத்திய பிறகு, கழக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி வட்ட கழக செயலாளர் லைனர் கே.பிரபு , தலைமையில், மாவட்ட கழக துணைச் செயலாளர் ஆர்.என்.துரை முன்னிலையில் 500 மகளிர்களுக்கு புடவை வழங்கினார். உடன், சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, மகளிர் அணி புரவலர் விஜயா தாயன்பன், மாநில மகளிர் அணி செயலாளர் எலன்டேவிட்சன், மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி, மாநில மகளிர் துணைச் செயலாளர் குமரி விஜயகுமார், நாமகிரிப்பேட்டை ஒன்றிய செயலாளர் கே.பி.இராமசுவாமி, ஏ.ஜி.ரவி, எட்வர்டு, நாமக்கல் மோகன், சேலம் சுஜாதா, மாமன்ற உறுப்பினர் கமலா செழியன் மாநில, மாவட்ட, பகுதி,வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.